நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம் : இடைநிலை – கீழ்ப்பிரிவு

*December 2007*

வினாக்கள் : 50

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களைத் தரப்பட்ட வினாத்தாளில் குறியிடுக.**

**“கங்காரு” என்ற பந்தியை வாசித்து 1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

> **கங்காரு**
>
> **உலகத்தில் பலவகை விலங்குகள் வாழ்கின்றன. அவ்விலங்குகளுள் கங்காரு என்பதும் ஒன்று. இவற்றை அவுஸ்திரேலியாவில் அதிகமாகக் காணலாம்.**
>
> **ஒரு வகைக் கங்காரு இளஞ்சிவப்பு நிறமாய் இருக்கும். இன்னொருவகைக் கங்காரு சாம்பல் நிறமாய் இருக்கும். கங்காருவின் அடிவயிறு வெண்மையாய் இருக்கும். அடிவயிற்றில் பை ஒன்று அமைந்துள்ளது. இப்பையில்தான் கங்காருவின் குட்டி தங்கி வளரும்.**
>
> **கங்காருவின் முன்னங்கால்கள் குறுகியிருக்கும். அதன் பின்னங்கால்கள் நீண்டிருக்கும். கங்காருவின் வால் பருத்து நீளமாக இருக்கும். அதன் பின்னங்காலுகளும் வாலும் வலிமை வாய்ந்தவை. கங்காரு குதித்துக் குதித்துச் செல்லும். அது தனது வாயையும் பின்னங்கால்களையும் தரையில் ஊன்றிக் கொண்டு உட்காரும். கங்காரு புல் இலை முதலியவற்றை இரையாகக் கொள்ளும்.**

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1. கங்காருகளை எந்த நாட்டில் அதிகமாகக் காணலாம்?

   (a) இலங்கை
   (b) இந்தியா
   (c) அவுஸ்திரேலியா
   (d) கனடா

2. கங்காருவின் எப்பகுதி வெள்ளை நிறமாய் இருக்கும்?

   (a) வாய்
   (b) மூக்கு
   (c) கழுத்து
   (d) அடிவயிறு

3. கங்காருவின் அடிவயிற்றில் உள்ள பை எதற்கு உதவுகிறது?

   (a) தண்ணீரை வைத்திருக்க
   (b) உணவை சேர்த்து வைக்க
   (c) பொருட்களை வைத்திருக்க
   (d) கங்காருவின் குட்டியை தங்கிவளர

4. கங்காருவின் எந்த உறுப்புகள் உறுதியானவை?

   (a) கண்ணும் வாயும்
   (b) காதும் மூக்கும்
   (c) பல்லும் நாக்கும்
   (d) வாலும் பின்னங்கால்களும்

5. கங்காரு எப்படித் தரையில் உட்காரும்?

அடுத்த பக்கத்தில் தொடரும்.

(a) வாலையும் பின்னங்கால்களையும் ஊன்றிக்கொண்டு
(b) முன்னங்கால்களையும் பின்னங்கால்களையும் ஊன்றிக்கொண்டு
(c) வாலையும் முன்னங்கால்களையும் ஊன்றிக்கொண்டு
(d) பின்னங்கால்களையும் உடலின் பின்பகுதியையும்

**6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் கோடிட்ட சொல்லிற்கான எதிர்ச் சொல்லைக் காட்டுக.**

6. ஆசிரியர் **<u>கேள்வி</u>** கேட்டார்.

(a) வினா (b) பதில் (c) கேலி (d) ஒலி

7. நல்லவர்கள் பிறருக்கு **<u>நன்மை</u>** செய்வார்கள்.

(a) நல்லது (b) தீமை (c) கெட்டது (d) இரக்கம்

8. இரண்டையும் ஒன்றையும் **<u>கூட்டினால்</u>** மூன்று.

(a) ஒட்டினால் (b) சேர்த்தால் (c) கழித்தால் (d) வெட்டினால்

9. பாலன் கடினமாக வேலை செய்து **<u>பணக்காரன்</u>** ஆனான்.

(a) செல்வந்தன் (b) ஏழை (c) வேலைக்காரன் (d) கெட்டிக்காரன்

10. அவன் **<u>இளமையில்</u>** படிக்கவில்லை.

(a) முதுமையில் (b) ஐம்பதில் (c) இருபதில் (d) சிறியவயதில்

**11 முதல் 15 வரையுள்ள வினாக்களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல்லை தெரியவும்.**

11. <u>குறுவி</u> முட்டை இட்டது.

(a) குறவி (b) குருவி (c) கூருவி (d) குடுவி

12. <u>முயள்</u> வேகமாக ஓடியது.

(a) முயழ் (b) மூயல் (c) முயல் (d) முசல்

13. மோகன் **<u>பல்லிக்குச்</u>** செல்கிறான்.

(a) பள்ளிக்குச் (b) பாள்ளிக்குச் (c) பல்லுக்குச் (d) பால்லிக்குச்

14. சிறுவர்கள் பந்து **<u>விலையாடினார்கள்</u>**.

(a) விழையாடினார்கள் (b) விலாடினார்கள்
(c) விளாடினார்கள் (d) விளையாடினார்கள்

15. எனக்கு தமிழ் நன்றாக **<u>ஏலுதத்</u>** தெரியும்.

(a) எளுதத் (b) ஏலுதத் (c) எழுதத் (d) ஏளுதத்

**16 முதல் 20 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு பன்மை சொல்லை தெரிந்து அவற்றை பூரணப்படுத்துக.**

16. **<u>நான்</u>** புத்தகம் வாங்கினோம்.

(a) நீ (b) நீங்கள் (c) நாங்கள் (d) நீர்

17. **<u>அவன்</u>** பாடம் படிக்கிறார்கள்.

(a) அவள் (b) அவர் (c) அவர்கள் (d) அது

18. **<u>அது</u>** வேகமாக ஓடின.

(a) அவை (b) அதுகள் (c) அவைகள் (d) அவர்கள்

19. **<u>அவள்</u>** மெதுவாக நடந்தார்கள்.

(a) அவள்கள் (b) அவர்கள் (c) அது (d) அவை

20. **<u>நீ</u>** ஆசிரியருடன் பேசினீர்களா?

(a) நீர் (b) நீங்கள் (c) நாங்கள் (d) நாம்

**21 முதல் 25 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை தெரியவும்.**

21. மாணவர்கள் குளிர்பானம் **<u>அருந்தினார்கள்</u>**

(a) அடித்தார்கள் (b) குடித்தார்கள்
(c) ஓடினார்கள் (d) சுவைத்தார்கள்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

22. எனது வீட்டிற்கு **அருகில்** பாடசாலை உள்ளது.

(a) தொலைவில் (b) பக்கத்தில்
(c) தூரத்தில் (d) வெளியில்

23. வெடிச்சத்தம் கேட்டதும் **அச்சத்தால்** ஓடினார்கள்.

(a) துக்கத்தால் (b) மயக்கத்தால்
(c) பயத்தால் (d) மகிழ்ச்சியால்

24. என்னால் வருத்தத்தை **தாங்க முடியவில்லை**.

(a) தூக்க முடியவில்லை (b) எடுக்க முடியவில்லை
(c) ஏற்க முடியவில்லை (d) பொறுக்க முடியவில்லை

25. தம்பி நன்றாகத் **தூங்குகிறான்.**

(a) நிற்கிறான் (b) ஓடுகிறான்
(c) பாய்கிறான் (d) உறங்குகிறான்

**26 முதல் 30 வரையுள்ள கேள்விகளுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

26. பாடம் படிப்பிப்பவர்

(a) மாணவர் (b) தந்தை (c) ஆசிரியர் (d) அம்மா

27. ஆகாய விமானம் ஓட்டுபவர்

(a) மாலுமி (b) கப்பலோட்டி (c) விமானி (d) தேரோட்டி

28. தீயை அணைப்பவர்

(a) காவலர் (b) பார்வையாளர் (c) தலைவர் (d) தீயணைக்கும் படையினர்

29. நோயாளிகளைக் கவனிப்பவர்

(a) நடுவர் (b) சுத்திகரிப்பவர் (c) மருத்துவர் (d) நடிகர்

30. போட்டிகளுக்கு தீர்ப்புக் கூறுபவர்

(a) ஆசிரியர் (b) எழுத்தாளர் (c) நடுவர் (d) தலைவர்

**31 தொடக்கம் 32 வரையான வினாக்களுக்கு வாக்கியங்களை சரியான ஓழுங்கில் அமைத்துக் காட்டுக.**

31. (1) அவர் குழந்தையை மருத்தவரிடம் கொண்டு சென்றார்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

(2) பின்னர் குழந்தையின் நோய் தீர அவர் மருந்து கொடுத்தார்.
(3) ஒரு நாள் குழந்தை ஓயாமல் அழுது கொண்டிருந்தது.
(4) மருத்துவர் குழந்தையை சோதித்துப் பார்த்தார்.
(5) அதைக் கண்ட தாயார் மிகவும் மனம் வருந்தினார்.

(a) (1), (2), (3), (4), (5)
(b) (3), (5), (1), (4), (2)
(c) (2), (3), (4), (5), (1)
(d) (3), (4), (5), (2), (1)

32. (1) மாலா அதில் ஏறித் தன் வீட்டிற்குச் சென்றாள்.
(2) மாலா பேருந்து வண்டிகள் நிறுத்திவைக்கும் இடத்திற்குச் சென்றாள்.
(3) பாடசாலை மாலை 3.15 மணிக்கு முடிந்தது.
(4) அங்கே பாடசாலை பேருந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(a) (3), (2), (4), (1)
(b) (1), (2), (3), (4)
(c) (4), (3), (2), (1)
(d) (2), (3), (4), (1)

**33 முதல் 36 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லை கீழ் தரப்பட்ட் சொற்களிலிருந்து தெரிவு செய்க.**

தண்ணீர் நமக்குப் பல வழிகளிலும் பயன்படுகிறது. (33) ................................ இல்லாமல் நாம் உயிர் வாழமுடியாது. தண்ணீர் நமக்கு எவ்வாறு கிடைக்கிறது தெரியுமா? மழை பெய்யும் போது ஆறுகளிலும், ஓடைகளிலும் தண்ணீர் நிறைகிறது. பின்னர் அது (34) ............................. வந்தடைகிறது. அங்கே தண்ணீர் சேர்த்து வைக்கப்படுகிறது. பின்பு அது சுத்தம் செய்யப்படுகிறது. (35) ............................ செய்யப்பட்ட தண்ணீர் குழாய்கள் மூலம் நம் வீடுகளுக்கு அனுப்பப்படுகிறது. தண்ணீர் ஓர் (36) .......... அதனால் அதைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **(a) அரிய பொருள்** | **(b) தண்ணீர்** | **(c) சுத்தம்** | **(d) நீர்த்தேக்கங்களை** |

**37 முதல் 45 வரையுள்ள வினாக்குளுக்கு மிகப் பொருத்தமான பதிலை தெரிவு செய்க.**

37. அவுஸ்திரேலியாவில் OPERA HOUSE எந்த நகரத்தில் அமைந்துள்ளது?

(a) மெல்பன் (b) கன்பரா (c) சிட்னி (d) பேர்த்

38. தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் ஆகிய மூன்றும் எதற்கு பயன்படுகிறது?

(a) விளம்பரம் செய்ய
(b) அறிவை வளர்க்க
(c) தகவல்களை பெற
(d) இவை எல்லாம் சரி

39. நாம் தொலைபேசியை எதற்குப் பயன்படுத்துகிறோம்?

(a) பொழுது போக்கிற்கு
(b) வீட்டை அழகாக வைத்திருக்க
(c) தொலைவில் இருப்பவரோடு பேசுவதற்கு

அடுத்த பக்கத்தில் தொடரும்.

(d) தொலைவில் நடைபெறும் நிகழ்சியை பார்ப்பதற்கு

40. "மகாகவி பாரதியார்" பிறந்த நாடு எது?

(a) அவுஸ்திரேலியா (b) இந்தியா
(c) இலங்கை (d) நியூசிலாந்து

41. "தமிழ்ப் புதுவருட தினம்" எந்த மாதத்தில் வருகிறது?

(a) தை (b) மார்கழி (c) சித்திரை (d) ஆடி

42. "நத்தார் பண்டிகை" எந்த மாதத்தில் வருகிறது?

(a) ஆனி (b) ஆவணி (c) மாசி (d) மார்கழி

43. ஓர் ஆண்டில் எத்தனை மாதங்கள் உண்டு?

(a) பத்து (b) ஏழு (c) பன்னிரண்டு (d) ஆறு

44. நமது அடிப்படைத் தேவைகள் எவை?

(a) வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி
(b) உணவு, உடை, வீடு
(c) விமானம், மோட்டார்வண்டி, கப்பல்
(d) பாடசாலை, கோவில், விளையாட்டு மைதானம்

45. ஓர் வாரத்தில் எத்தனை நாட்கள் உண்டு?

(a) ஐந்து (b) பத்து (c) ஏழு (d) பன்னிரண்டு

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**நம் நாடு என்ற பாடலை வாசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு 46 முதல் 50 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

**நம் நாடு**

**அழகினில் சிறந்தது நம் நாடு**
**அருவிகள் பாயும் நம்நாடு**
**அளவினில் பெரியது நம் நாடு**

**வளங்கள் நிறைந்தது நம் நாடு**
**வனங்கள் செறிந்தது நம் நாடு**
**பழங்கள் நிறைந்தது நம் நாடு**
**பயிர்கள் மலிந்தது நம் நாடு**

**பல்லின மக்கள் வாழ் நாடு**
**பசுபிக் கடல் சேர் நாடு**
**நல்லின மரபுகள் வளர் நாடு**
**நமதெனப் போற்றும் இந் நாடு**

46. இந்தப் பாடலில் குறிப்பிடப்படும் நம் **நாடு** எது?

(a) இலங்கை (b) அவுஸ்திரேலியா (c) இந்தியா (d) நியூசிலாந்து

47. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள "**வளங்கள்**" என்ற சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்:

(a) கடல் (b) காடுகள் (c) பயிர்கள் (d) ஆறுகள்

48. இப்பாடலில் குறிப்பிடப்படும் "**பல்லின மக்கள்**" என்பதன் கருத்து (பொருள்) என்ன?

(a) பல மொழிகளைப் பேசுபவர்கள் (b) வேறு கலாச்சாரத்தைப் பேணுபவர்கள்
(c) மேற்குறிப்பிட்ட இரண்டும் (d) ஒரே மொழியை பேசுபவர்கள்

49. அவுஸ்திரேலியா மற்றைய நாடுகளைப் பார்க்கிலும் அளவில்:

(a) சிறயது (b) பெரியது (c) நீளமானது (d) அகலமானது

50. நம் நாட்டைப் பற்றி இப்பாடல் என்ன கூறுகின்றது.

(a) வளமில்லாதது, நல்ல மரபுகள் இல்லாதது, பழங்கள் இல்லாதது
(b) சிறியது, சுத்தமற்றது, பயிர்கள் இல்லாதது
(c) வளங்கள் இல்லாதது, கடல் இல்லாதது, ஒரு மொழியை மட்டும்கொண்டது.
(d) அழகானது, அளவில் பெரியது, பழங்கள் நிறைந்தது.